வலிகாமம் வடக்கு பிரதேசசபை
யாழ்ப்பாண மாவட்டம்

---------------------------------

# 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 20 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 டிசம்பர் 19 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

i. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிகை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிகை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 01 | 19இ322 | 01 | 118இ444 |
| அதிகரித்துக் கூறல்கள் | | | 03 | 35இ712 |
| விடுபாடுகள் | | | 01 | 2இ866இ917 |

ii. சபையின் பயன்பாட்டிலுள்ள றூ.டு.பு 3711 இலக்க கழிவுறுஞ்சி வாகனத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படாமையால் மோட்டடர் வாகனங்களும் வண்டிகளினதும் பெறுமதி கணக்குகளில் குறைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

---

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 19இ053இ300 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.3 இணக்கமின்மைகள்

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| 1987ம் ஆண்டின் பிரதேசசபை சட்ட இல 15. | |
| அத்தியாயம் ஏ பிரிவு 158(1) | ஆதனவரி நிலுவை ரூபா 542,983 செலுத்தத் தவறியோருக்கு செயலாளரினால் ஆணைச் சீட்டு எழுதப் பட்டிருக்கவில்லை. . |
| நிதி ஒழுங்கு விதி 571 | காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 121,571 நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

2.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் வருமானத்திலும் கூடிய செலவினமாக ரூபா 4இ319 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்

போது மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 17இ555 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 12இ995இ470 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 23இ855இ706 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| ை. இறைகளும் வரிகளும் | 87 | 104 | 543 |
| ைை.குத்தகை வாடகைகள் | 2இ916 | 3இ110 | - |
| ைைை.அனுமதிப்பத்திரக்கட்டணங்கள் | 3இ331 | 4இ334 | - |
| ைஎ.வேறு வருமானங்கள் | 65இ415 | 51இ206 | 37இ175 |

2.3.2 வருமான முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் ரூபா 612,758 பெறுமதியான வீதவரி மற்றும் வாடகை நிலுவை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமானதும் சட்டரீதியானதுமான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

2.3.3 நீதிமன்றத் தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும்

---------------------------------------------------------------------------------

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின்கீழ் மல்லாகம் நீதவான் நீதிமன்றிலிருந்து மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ரூபா 1இ145இ055 பெறுமதியான நீதிமன்றத் தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும் வருமானமாகவோ வருமதியாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

2.3.4 முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள்

--------------------------------------------------------

2006 – 2013 ஆண்டுவரையான காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 50இ454இ189 பெறுமதியான முத்திரை தீர்வை பட்டியல் கிடைக்கப் பெற்று வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப் பட்டதேயன்றி அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

2.3.5 அறவிட வேண்டிய ஊழியர் கடன்

-----------------------------------------------------

சபையில் கடமையாற்றிய முன்பள்ளி ஆசிரியரிடமிருந்து அறவிடவேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 11,287 மீளாய்வாண்டில் அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்து முகாமைத்துவம்

---------------------------------------

2.4.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

---------------------------------------------------

சபையிலுள்ள பின்வரும் வாகனங்கள் மீளாய்வாண்டில் பயன்பாடின்றி வாகனத்தரிப்பிடத்தில் காணப்படுகிறது.

2.4.2 செயற்பாடுகளின் செயற்திறமையின்மை

---------------------------------------------------------------

உள்;ராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்ட சனசமூக நிலைய நன்கொடைகள் ரூபா 15,500 குறித்த நோக்கத்திற்கு வழங்கப்படாது சிலவ்லறைக் கடன் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.5 ஒப்பந்த நிர்வாகம்

2.5.1 காலதாமதமான செயற்திட்டங்கள்

i. மீளாய்வாண்டுக்கு முன்னைய ஆண்டுகளுக்கு சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட மூலதன வேலைகள் ரூபா 1,226,426 அறிக்கையிடும் திகதி வரையும் செய்யப்படாதுள்ளது.

2.5.2 அங்கீகரிக்கப்படாத மூலதனவேலை

மீளாய்வாண்டில் சபை நிதியில் ரூபா 1,316,325 பெறுமதியான மாவிட்டபுரம் பத்தாங்கட்டை வீதி மூலதன வேலை வரவு செலவுத் திட்டத்தினால் அங்கீகரிக்கப்படாது பிரதேச செயலாளரின் னுளு.˙.ஏடீ.˙.ஊருடு.˙.ஆயுஏஜ.˙.வுநுஆ.˙.2013ம் இலக்க உப மானிய வரவு செலவுத் திட்டத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வீதவரி அறவீடு
ii. சொத்து மதிப்பீடு
iii. நானாவித வைப்புக்கள்
iv. சில்லறைக் கடனாளிகள்